Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 07 24-10-94 திங்கட்கிழமை ஓசை 248

## நீரிழிவு நோயாளரின் எண்ணிக்கை வளரும் நாடுகளில் அதிகரிப்பு

வளரும் நாடுகளில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஜெனீவாவிலுள்ள உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன் வளரும் நாடுகளில் ஆறு கோடி நீரிழிவு நோயாளிகள் இருந்தனர் என்றும் இன்னும் ஆறுஆண்டுகளில் இவ்எண்ணிக்கை 10கோடியாக இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, கொழுப்பு நிறைந்த உணவுகளை அதிகம் உண்ணுதல், மனக்கவலை ஒரே இடத்தில் பல மணி நேரம் எங்கும் செல்லாமல் (6ஆம் பக்கம் பார்க்க)

# 2 ஆம் கட்டப் பேச்சுக்கள் இன்று ஆரம்பம்;

# பாதை திறப்பதை புலிகள் வற்புறுத்துவர்

## போர் நிறுத்தம் பற்றியும் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையிலான இரண்டாம் கட்டசமாதான பேச்சுவார்த்தை இன்று காலை ஆரம்பமாகவுள்ளது. இப் பேச்சுவார்த்தையில், விடுதலைப் புலிகள் தரப்பினர் போர் நிறுத்தம் குறித்தும், பூநகரிப் பாதை திறப்பதன் அவசியம் குறித்தும் வலியுறுத்துவர் எனத் தெரிய வருகின்றது. அத்தோடு, முதற்கட்ட பேச்சுவார்த்தையில், ஆராயப்பட்ட ஏனைய விவகாரங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை ஆரம்பமாகும் இவ்இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் முதலாம் கட்டப்பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட பிரதிநிதிகளே கலந்து கொள்ளவுள்ளனர். அரசாங்கத் தரப்பிலும் முன்னைய குழுவினரே பங்குபற்றவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறத்தல் தொடர்பாகவும், போர் நிறுத்தம் பற்றியும் விடுதலைப் புலிகள் தரப்பினர் வலியுறுத்துவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவை தவிர கடந்த பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட ஏனையவிவகாரங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## இன்று இரண்டு சுற்று பேச்சு நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் காலை, மாலை என இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

காலை 9-00 மணியளவில் முதற்சுற்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகலாம் எனவும், இரண்டாம் கட்டப் பேச்சு மதிய உணவிற்குப் பின்னர், பிற்பகலில் நடைபெறலாம் எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம், இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற பின்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெறும் எனவும் தெரியவருகின்றது.

## பாதை திறப்பது குறித்து பரிசீலிக்கப்படலாம்

-பலபத்த பெண்டி

(கொழும்பு)

வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அபிவிருத்தி போன்றன குறித்தே இன்றைய பேச்சுவார்த்தையின் போது ஆராயப்படும் என அரச தரப்பு பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பலபத்த பெண்டி தெரிவித்தார்.

சங்குப்பிட்டி-கேரதீவு பிரதான பாதையை திறந்து விடுவது குறித்துப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம்

## ஆனையிறவு, பூநகரி தளங்களை அரச குழு தாளப்பறந்து பார்வையிடும்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை உலங்குவானூர்தி மூலம் யாழ். வந்து சேரும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவினர் வரும் வழியில் ஆனையிறவு, பூநகரி படைத்தளங்களை தாளப் பறந்து பார்வையிடவுள்ளனர்.

அரசாங்கத் தரப்புக் குழுவினர்நேரடியாகவே கொழும்பிலிருந்து உலங் குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். அவ்வாறு வரும் வழியிலேயே ஆனையிறவு, பூநகரிப் படைத் தளங்களை அரசாங்கத் தரப்புக் குழுவினர் தாளப்பறந்து பார்வையிடவுள்ளனர்.

இதேசமயம் இன்று மாலை பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் மாலை 5-00 மணியளவில் அரசாங்கத்தரப்புக் குழுவினர் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்புவர்

## அரசாங்கக் குழுவினர் நல்லூர் செல்வர்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ் வந்து சேரும் அரசாங்க தரப்புக் குழுவினர் நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கும் சென்றுவழிபாடு நடத்தவுள்ளனர்.

கடந்தமுறை யாழ். வந்த போது திரு. லயனல் பெர்னாண்டோ தவிர ஏனையவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்ல நேரம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இதன் காரணமாகவே இம்முறைபேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட முன்னரே அரசாங்கத் (6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காவலிலுள்ள கைதிகளை அரச பிரதிநிதிகள் பார்வையிடுவர்

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில்கலந்துகொள்ள

கைதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

லைப் புலிகளின் காவலில் உள்ளது தெரிந்ததே, இவர்களை

பிரதிநிதிகளே கலந்து கான தரைவழிப்பாதை திற

## இன்று இரண்டு சுற்று பேச்சு நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் காலை, மாலை என இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

காலை 9-00 மணியளவில் முதற்சுற்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகலாம் எனவும், இரண்டாம் கட்டப் பேச்சு மதிய உணவிற்குப் பின்னர், பிற்பகலில் நடைபெறலாம் எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம், இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற பின்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெறும் எனவும் தெரியவருகின்றது.

## பாதை திறப்பது குறித்து பரிசீலிக்கப்படலாம்

-பலபத்த பெண்டி

(கொழும்பு)

வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அபிவிருத்தி போன்றன குறித்தே இன்றைய பேச்சுவார்த்தையின் போது ஆராயப்படும் என அரச தரப்பு பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பலபத்த பெண்டி தெரிவித்தார்.

சங்குப்பிட்டி-கேரதீவு பிரதான பாதையை திறந்து விடுவது குறித்துப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் எனினும் இது சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்கள் பெரும்பாலும் ஆராயப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் போது பிரேரிக்கப்பட்ட பலவிடயங்கள்பற்றி இன்று விரிவாக ஆராயப்படும் என்றும் யுத்தநிறுத்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப் பெற்றால் அது பற்றி ஆராய அரசாங்கம் தயாராக உள்ளது எனவும் தெரிவித்தார்.

## பிரதமர் - அரசாங்க குழுவினர் நீண்டநேரம் கலந்துரையாடல்

இன்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இனப்பிரச்சினை தீர்வு குறித்த வழிவகைகளைப் பற்றி பேச்சு நடாத்த யாழ்ப்பாணம் வரும் அரச பிரதிநிதிகள் நேற்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்து நீண்ட நேரம் தீவிரமான ஆலோசனை நடத்தியுள்ளதாககடைசியாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன:

இவர்கள் இன்று இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் போது முதல் சுற்றில் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரதமரின் முடிவைப் பெற்றுக்கொள்ளும் முகமாக பிரதமருடன் பேசியிருக்கலாம் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ. நி)

# ராணுவம் முன்வைத்த திட்டத்துடன் அரச பிரதிநிதிகள் யாழ். செல்கின்றனர்

-ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்ட பேச்சுக்களை நடத்துவதற்காக இன்று யாழ்ப்பாணம் வரும் சிறிலங்கா அரச தரப்பு பிரதிநிதிகள் சங்குப்பிட்டி கேரதீவு பாதையை வடபகுதி மக்கள் இலகுவாகப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்கு இராணுவ உயர்பீடம் முன்வைத்திருக்கும் பிரச்சினைகள் அடங்கிய யோசனைகளுடன் வருகின்றனர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்துள்ளார்:

சங்குப்பிட்டி-கேரதீவு பாதையைத் திறப்பதற்கு இணங்குவதற்கு படையினர் தயாராகவே இருக்கின்றனர். பூநகரிப் பகுதியில் இருக்கின்ற இராணுவ முகாமை அகற்றுவதில் படையினரைப் பொறுத்தவரையில் பலவித சிக்கல்கள் இருக்கின்றன. இப்பாதையூடாக மக்கள் போக்குவரத்து செய்யும் போது எதுவித சோதனைகளும் மேற்கொள்ளக் கூடாது என விடுதலைப் புலிகளால் விடுக்கப்படும் கோரிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை,

இக்கேரதீவு - சங்குப்பிட்டி பாதை திறக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து அனுமதிக்கப்படும் இடத்து கடுமையான சோதனைகளை படையினர் செய்யப்போவதில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை முறியடிக்க உயர் ராணுவ அதிகாரிகள் முயற்சி

பிரதமர் சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் சிலர் சமாதான பேச்சுவார்த்தைகளைத் தோல்வி அடையச் செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள் அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு தாங்கள் கட்டளையிடலாம் எனக் கருதுகின்றனர்.

இதற்கு நாம் அஞ்சப் போவதில்லை. அது மட்டுமல்ல இராணுவத்தினர் மீது மேலதிக கட்டுப்பாடுகளையும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார், பிரதமருக்கும் இராணுவ உயர்மட்டத்தினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் பற்றி 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான நிருபர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி தேர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பிலருந்து உலங் குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். அவ்வாறு வரும் வழியிலேயே ஆனையிறவு, பூநகரிப் படைத் தளங்களை அரசாங்கத் தரப்புக் குழுவினர் நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கும் சென்றுவழிபாடு நடத்தவுள்ளனர்.

கடந்தமுறை யாழ். வந்த போது திரு. லயனல் பெர்னாலுக்குச் செல்ல நேரம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இதன் காரணமாகவே இம்முறைபேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட முன்னரே அரசாங்கக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காவலிலுள்ள கைதிகளை அரச பிரதிநிதிகள் பார்வையிடுவர்

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில்கலந்துகொள்ள இன்று யாழ் வரும் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் புலிகளின் காவலிலுள்ள போர்க் கைதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

சிறிலங்காஇராணுவ, கடற்படை மற்றும் பொலிசார் போர்க் கைதிகளாக விடுதலைப் புலிகளின் காவலில் உள்ளது தெரிந்ததே, இவர்களை இன்று வரும் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் சந்தித்து உரையாடவுள்ளனர்.

## பிரச்சினை தீர்விற்கு வடக்கு-கிழக்கு எல்லை மாற்றவேண்டி வரலாம்

பொ ஐ.மு செயலாளர் ஜெயரத்ன

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக எடுக்கும் நடவடிக்கைகளில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் எல்லைகளில் மாற்றம் ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ் மக்களுக்கான அதிஉயர் பரவலாக்கல் வழங்கப்படும் போது ஏனைய சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் எல்லைகளில மாற்றம் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வேறு எந்த ஒரு நாட்டிலும் உள்ள அதிகாரப் பரவலாக்கலை தாம் பின்பற்றப் போவதில்லை எனவும் சிறிலங்காவின் சகல இன மக்களினதும் அபிலாஷைகளின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைத் தீர்வு அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நூலக புனரமைப்பு குழுவில் புலிகளை சேர்க்க முயற்சி

யாழ்ப்பாண நூலகத்தின் புனரமைப்பைத் திட்டமிட என அரசாங்கம் மூன்றுபேர் கொண்ட குழுவொன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச இந்த குழுவில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவரைச் சேர்ப்பது பற்றி ஆராயப்படும் என அரசாங்க பிரதிநிதி ரூபவாஹினிக்கு தெரிவித்துள்ளார்.

## செய்தியாளர் குழு நேற்று வந்தடைந்தது

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பிக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையையடுத்து உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் நேற்று யாழ். வந்தனர். பதினெட்டு பேர்கொண்ட பத்திரிகையாளர் குழுவில் லேக்ஹவுஸ்,

(6ஆம் பக்கம் பாரக்க)

## உலக நாடுகள் பாராட்டு

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை உலக நாடுகள் பல பாராட்டியுள்ளன

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி கனடா, பிரான்ஸ்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவரின் வலையில் சிக்கிய "ரொக்கட்"

(சென்னை)

சென்னை மீனவர்கள் கடலில் வீசிய வலையில் "ரொக்கட்" ஒன்று அகப்பட்டுள்ளது இந்த ரொக்கட் ஒரு விண்வெளி ரொக்கட்டா? அல்லது இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் தாக்குதல் ரொக்கட்டா என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. கடந்த வாரம் சென்னையைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் விசைப் படகொன்றில் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். சென்னையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி வீடு முன் குண்டு வீச்சு

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான காமினி திசாநாயக்கவின் இல்லத்திற்கு முன்னால் கைக்குண்டு ஒன்று வெடித்துள்ளது.

கடந்த வெள்ளி இரவு 9.15க்கு இச்சம்பவம் இடம்பெற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கருத்தரங்கு

''தட்டெழுத்துப் பரீட்சை வழிகாட்டி'' நூல் பாவனையாளருக்கான கருத்தரங்கு 30-10-94 ஞாயிறு பி.ப. 1-30 ற்கு கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி [அருகில் உள்ள திறந்தவெளிப்பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும். பதிவுசெய்தவர்கள் சமூகம் தரவும். (6171)

### விற்பனைக்கு

ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பிரிமா புறொயிலர் குஞ்சுகளும், பிரிமா சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும் நன்கு உக்கிய கோழி எருவும் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி. குலசிங்கம் 9, றக்கா வீதி, (BARக்கு முன்பாக) யாழ்ப்பாணம் (6173)

### பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த (சா/த) சனி ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில பதிக: பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6175)

### பயிற்சி கல்லூரியில் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - மாவட்ட கூட்டுறவுச் சபை மற்றும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஆகியன இயங்கும் மணிக்கூட்டு வீதியில் உள்ள கட்டடம் மழை நாட்களில் வெள்ளமும் வெள்ளக் காடுமாக காட்சியளிக்கின்றது. சென்ற ஆண்டு சிறிலங்கா விமானப் படையின் 'சுப்பர் சொனிக்' இப்பகுதியில் நடாத்திய குண்டு வீச்சினால் இக் கட்டடத்தின் ஓடுகள், சிற்றுகள் நொருங்கின பின்னர் ஓடுகள் போடப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட போதிலும் தற்போது மழை பெய்யத் தொடங்கியவுடன் ஆங்காங்கே காணப்படும் துவாரங்களின் ஊடாக நீர் ஒழுகுவதால் விரைவிலேயே இங்குள்ள அறைகளில் வெள்ளம் வந்துவிடுகின்றது- பெரு மழை பெய்யின் சபையில் கூட்டமோ கல்லூரியில் வகுப்புகளோ நடத்த முடியாமற் போய் விடலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

### தவறிவிட்டது

22-10-94 அன்று காலை கிளாலியில் பொருட்கள் இறக்கும் துறையில் ஒருதொகை ரொக்கப்பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பளை காவற்றுறையில் தயவு செய்து ஒப்படைக்கவும். அப்பையாபிள்ளை கதிரவேலு (6179)

### எல்லைகள் மாற்றியமைப்பு

அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எல்லைகளை மாற்றியமைக்கும் என அமைச்சர் ஜயரட்ண தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைத் தீர்வின் ஒரு அம்சமாகவே அரசு இதைமேற்கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

## 90-ம் நாள்நினைவலைகள்



லெப். குமரேசன்
(வேலாயுதம் சிவகரன்)

| தாயின் மடியில் | தாயக மண்மீட்பில் |
|---|---|
| 1973.12.28 | 1994.07.27 |

உறவு என்கின்ற வெந்தணலில் வீழ்ந்து
உருக்குலைந்து போகாமல்
உணர்வுகளை உன் மனதில் புதைத்து
கண்ணில் தெரிகின்ற எதிர்காலக் கனவுடன்
நெருப்பு விளைகின்ற தேசத்தின் வித்தாய்
கொள்ளி ஏந்திய அக்கினிப் பேய்களின்
குகைகளைத் தேடி நீ வேள்வி தொடர்கையில்
பாவியர் சதியினால் தீங்கிளைத்தனரோ...
மரணமும் வந்துனைக் காவு கொண்டதுவோ...
வீழ்ந்தும் எழுந்துவரும் உனது உணர்வுகளில்-
மீண்டும்
பழுத்து விழுந்தொரு பயணம் தொடரும்
மனதால் செயலால் வாழ்பரப்பால் பணியால்
பிரிய சாத்தியமற்ற உன் நினைவுகளுடன் நாம்.

870, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி. - குடும்பத்தினர்
(சி-10569)

உ
காமாக்ஷி துணை
விராட் விஸ்வப்பிரம்மனே நம:

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் முயற்சி எடுக்க வேண்டும்

### நூற்றாண்டு விழாவில் உரை

இக் கல்லூரியின் ஸ்தாபகரான அம்பலவாண நாவலர் சைவம், தமிழ் ஆகிய இரண்டு துறைகளிலும் துறைபோகக்கற்றவர் இரண்டையும் வளர்ப்பதற்காக பல நூல்களை இயற்றியவர் சகலரும் தமிழ் மொழியைப் பிழையின்றி சிறப்பாகக் கற்க வேண்டுமென விரும்பியவர் ஆனால், ஆரம்பக்கல்வியானது சிறப்பாக அமையாததாலேயே பல்கலைக் கழகத்தில் கூட எழுத்துப்பிழை சொற்பிழை வசனப்பிழைகளுடன் மாணவர்கள் எழுதுவதை - பேசுவதைக் காண்கின்றோம், இந்நிலை மாற வேண்டும் இதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் துணை புரிய வேண்டும். அப்போது தான் வட்டு. இந்துக்கல்லூரியின் ஸ்தாபகரான அம்பலவாண நாவலரின் எண்ணம் நிறைவேறும்,

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு நிறுவுநர் பேருரை ஆற்றிய பேராசிரியர் திரு அ. சண்முகதாஸ் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டு. இந்துக் கல்லூரிவள்ளியம்மை மண்டபத்தில் கடந்த 14ஆம் திகதி அதிபர் திரு நா. ஜெயநாயகம் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

### வங்கிப்பணம் கொழும்பு சென்றது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறையில் இருந்து நேற்று கொழும்பு புறப்பட்ட மாகோ' கப்பலில் யாழ். இலங்கை வங்கி பணம் அனுப்பி வைத்தது.

இலங்கை வங்கி இக்கப்பலில் பத்து இலட்சம் ரூபாவை அனுப்பியுள்ளது. மேலும்இக் கப்பலில் 20 தபால் பொதிகளும் செல்கின்றன. (யோ)

### சுவாமி விவேகானந்தர் சிகாகோ உரை-

## சிறப்புப் பரிசு

சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சிறப்புப் பங்களிப்பு செய்தமைக்கு கீழ்க்காணும் அன்பர்களுக்கு அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஜன்ம தினமன்று (25.12.94) பரிசு அளிக்கப்படும்.

★ திரு. க. கமலசேகரம்
முகாமையாளர்தேசியசேமிப்புவங்கிபருத்தித்துறை
★ திரு. கே. நடராஜா
அதிபர், ஹாட்லிக்கல்லூரி
★ திரு. செ. தங்கராஜா
அதிபர், கற்கோவளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
★ திரு. செ. வேணுகோபால்
அதிபர், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
★ திருமதி லோ. குமாரசாமி
அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி
★ திருமதி சரோஜினி சுந்தரலிங்கம்
அதிபர், வடமராட்சிமத்தியமகளிர் கல்லூரி கரவெட்டி
★ திரு. வே- சிவசிதப்பரம்
அதிபர், ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி
★ திருமதி சரஸ்வதி ஜெயராஜா
யாழ் மகளிர் இந்துக்கல்லூரி
★ திருமதி செல்வரூபி ஸ்கந்தராஜா
அதிபர், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
★ திரு. T. சந்தோஷம்
அதிபர், யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி
★ திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
அதிபர், இணுவில் மத்திய கல்லூரி
★ திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
அதிபர், இராமநாதன் கல்லூரி
★ செல்வி கி. வீரசிங்கம்
அதிபர், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்
★ திரு. எம். பாலசுப்பிரமணியம்

## கவிஞர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஒழுங்கு செய்திருந்த கவிஞர் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமாலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றதுவெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரவி தலைமையில் இது நடைபெற்றது.

'காலம் எழுதிய வரிகள்' கவிதை தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளைப் படைத்த கவிஞர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை கலந்து கொண்டு 'காலம் எழுதிய வரிகள்' கவிதை நூலை கவிஞர்களுக்கு வழங்கினார்.

திரு. யேசுராசா இந்நிகழ்வில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

தேநீர் விருந்துபசாரத்தை அடுத்து கவிஞர்கள் தமது மனக் கருத்துக்களை எல்லோர் மத்தியிலும் பகிர்ந்து கொண்டனர்.

51 கவிஞர்களின் கவிதைகளை தாங்கிய தொகுப்பு நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (தி. பா, க)

### பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் பரிசுத்தினம் - 1994 நாளை செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

### 24. 10. 1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் திருமலை -திரியாய், கொடியாற்றுப் பகுதியில் எமது முகாம் ஒன்றைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**முகமட்** (கணபதிப்பிள்ளை சௌந்தரராசன் - அன்புவழிபுரம் - திருமலை)

1986-ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**லிங்கம்** (கிருஷ்ணபிள்ளை சொர்ணலிங்கம் - குமாரபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

1987-ம் ஆண்டு மட்டு - வடமுனையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய'
**கப்டன் றதீஸ்- றதி** (நல்லதம்பி முத்தழகு - வாழைச்சேனை -மட்டு)

யாழ்- கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**கரன்** (இரத்தினம் பபிகரன்- கொழும்புத்துறை-யாழ்)

யாழ் - கல்வியங்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,
**அ. செல்லாச்சாமி**

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**மேஜர் கென்றி** (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன் - 4-ம் வட்டாரம் புங்குடுதீவு)

1991-ம் ஆண்டு மட்டு வந்தாறு மூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**அன்ரனி** (அன்ரனிதாஸ் - சிவத்தப்பாலம்வெளி - மட்டு)

1991-ம் ஆண்டு மணலாறு-மண்கிண்டிமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**இறையன்-ராம்குமார்** (செல்வரட்ணம் நாகேந்திரன் - இலுப்பையடிச்சேனை மட்டு)
**லெப். இறைகுமார் -நசார்** (குமாரசாமி தவராசலிங்கம் - மிருசுவில் வடக்கு - கொடிகாமம்)
**2-ம லெப்- நெடுமாறன் - குமரேஸ்** (கிருஷ்

டடத்தின் ஓடுகள், சிற்றுகள் நொருங்கின பின்னர் ஓடுகள் போடப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட போதிலும் தற்போது மழை பெய்யத் தொடங்கியவுடன் ஆங்காங்கே காணப்படும் துவாரங்களின் ஊடாக நீர் ஒழுகுவதால் விரைவிலேயே இங்குள்ள அறைகளில் வெள்ளம் வந்து விடுகின்றது- பெரு மழை பெய்யின் சபையில் கூட்டமோ கல்லூரியில் வகுப்புகளோ நடத்த முடியாமற் போய் விடலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

நெருப்பு விளைகின்ற தேசத்தின் வித்தாய்
கொள்ளி ஏந்திய அக்கினிப் பேய்களின்
குகைகளைத் தேடி நீ வேள்வி தொடர்கையில்
பாவியர் சதியினால் தீங்கிளைத்தனரோ...
மரணமும் வந்துனைக் காவு கொண்டதுவோ...
வீழ்ந்தும் எழுந்துவரும் உனது உணர்வுகளில்-
மீண்டும்

பழுத்து விழுந்தொரு பயணம் தொடரும்
மனதால் செயலால் வாழ்பரப்பால் பணியால்
பிரிய சாத்தியமற்ற உன் நினைவுகளுடன் நாம்.

870, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

- குடும்பத்தினர்

(சி-10569)

உ
காமாக்ஷி துணை
விராட் விஸ்வப்பிரம்மனே நம:

## பூப்புனித நீராட்டு விழா

அன்புடையீர்,

நிகழும் பவ வருடம் ஐப்பசி மாதம் 9-ம் நாள் (26-10-94) புதன்கிழமை காலை 9.03 முதல் 12.00 மணிவரை வரும் சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

★ யாழினி அவர்களுக்கு ★

பூப்புனித நீராட்டுவிழா நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் நலன் விரும்பிகள் யாவரும் வருகை தந்து செல்வியை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
க. தயாளன் தம்பதிகள்

957, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(6176)


மாபெரும் மலிவு விற்பனை

★ ஆனைமுகன் பிடவை மாளிகை ★

ஸ்தாபனத்தார்

24. 10. 94 தொடக்கம் 1. 11. 94 வரை

★ சகல விதமான பிடவைத் தினுசுகளையும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றோம் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

★ நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

ஆனைமுகன் பிடவை மாளிகை
நெல்லியடி - கரவெட்டி

வடமராட்சி வாழ் மக்கள் தீபாவளியை குதூகலமாக கொண்டாட மலிவு விற்பனை

எமது தலைமை ஸ்தாபனமாகிய

குட்லக் எம்போறியம் (புடவை மாளிகை)

பிரதான வீதி, பருத்தித்துறை

ஸ்தாபனத்திலும் மலிவு விற்பனை நடைபெறுகிறது

(சி-10570)


★ திருமதி சரோஜினி சுந்தரலிங்கம்
அதிபர், வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி கரவெட்டி

★ திரு. வே- சிவசிதம்பரம்
அதிபர், ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி

★ திருமதி சரஸ்வதி ஜெயராஜா
யாழ் மகளிர் இந்துக்கல்லூரி

★ திருமதி செல்வரூபி ஸ்கந்தராஜா
அதிபர், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

★ திரு. T. சந்தோஷம்
அதிபர், யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி

★ திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
அதிபர், இணுவில் மத்திய கல்லூரி

★ திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
அதிபர், இராமநாதன் கல்லூரி

★ செல்வி கி. வீரசிங்கம்
அதிபர், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்

★ திரு. எம். பாலசுப்பிரமணியம்
அதிபர், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம்

★ திரு. வி. சந்திரசேகரம்பிள்ளை
அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி

★ திரு. ம-வ- கானமயில்நாதன்
ஆசிரியர் உதயன்

செயலாளர்,
ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(6174)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24-09-1974

வீரச்சாவு
24-10-1992

### லெப்டினன்ட் நெடுமாறன்

[கிருஸ்ணபிள்ளை கிருபாகரன் (குமரேசு)]
(மண்கிண்டி இராணுவ முகாம் காவலரண் தகர்ப்பில்)

கிருபா!
கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனத்துடனே
உள்ளம் திறந்தெவர்க்கும் உள்ளதை பேசிடுவாய்
மின்னல் என வீரப்புலியாகி களப்பலியானாயோ
மணலாற்றில் நீ மறைந்தாலும் எம்முன்னால்
நீ நடமாடும் காட்சிதனை மறப்போமா?
உன் பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்

புலோலி தெற்கு
புலோலி
24-10-94

- குடும்பத்தினர்

(6172)

திய,
**மேஜர் கென்றி** (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன் - 4-ம் வட்டாரம் புங்குடுதீவு)

1991-ம் ஆண்டு மட்டு வந்தாறு மூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அன்ரனி** (அன்ரனிதாஸ் - சிவத் தப்பாலம்வெளி - மட்டு)

1991 -ம் ஆண்டு மணலாறு-மண்கிண்டிமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**இறையன்-ராம்குமார்** (செல்வரட்ணம் நாகேந்திரன் - இலுப்பையடிச்சேனை மட்டு)

**லெப். இறைகுமார் -நசார்** (குமாரசாமி தவராசலிங்கம் - மிருசுவில் வடக்கு - கொடிகாமம்)

**2-ம லெப்- நெடுமாறன் - குமரேஸ்** (கிருஷ்ணபிள்ளை கிருபாகரன் -புலோலி - பருத்தித்துறை)

1993 -ம் ஆண்டு மன்னார் - பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். செங்கண்ணன் - சத்தியராஜ்** (முருகேசு திராவிடமுத்து - 15 -ம் கிராமம் - அம்பாறை)

**லெப். திண்ணியன் - ரங்கா** (கணபதிப்பிள்ளை கருணாநிதி - குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப்புலிகள்

(இ-10568)


## "வானோசை"

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது அதிக பக்கங்களுடன் அறிவியல், அரசியல் மற்றும் பல் சுவை அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது வானோசை. யாழ். மாவட்டத்திலுள்ள சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் அறிவுப் பசிக்கு விருந்தளிக்கும் வானோசை உங்கள் பாடசாலைகளுக்கே வந்து சேரும்.

தொடர்புக்கு:

வானோசை
இல. 202, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(6178)

# இந்தியப்படை 3மாதம்தங்கியிருந்தால் வட-கிழக்கு யுத்தம் முடிந்திருக்கும்

### எதிர்க்கட்சித் தலைவர் காமினி கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியப் படையினர் இன்னுமூன்று மாதகாலம் இங்கு தங்கியிருந்திருந்தால், வடக்கு கிழக்கு யுத்தமே முடிவடைந்திருக்கும். சமாதானம் ஏற்படுத்தப்படுவதை நான் விரும்புகின்றேன். ஆனால் ஆயும் ஏந்துவோரின் ஆயுதங்களைக் களைவதை இந்த அரசாங்கத்தினால் செய்ய முடியாது என்பதையும்கூறிவைக்க விரும்புகிறேன் என, எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது அவர் இவ்வாறுதெரிவித்தார் அங்கு அவர் மேலும் கூறுகையில், இந்தியப் படைகளை நாட்டிலிருந்து வெளியேற்றியதால் ஏற்பட்ட பலாபலன்களை மக்களும் அன்றையஅரசும் கண்டுகொண்டனர் எனத் தெரிவித்தார்.

# சந்திரிகா எழுத்தில் தந்தால் போட்டியிலிருந்து விலகத் தயார்

### ஜனாதிபதி வேட்பாளர் கலப்பதி தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிபதவியை ஒழிப்பதாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்க ரூபவாஹினியின் பேட்டியொன்றில் கூறியிருப்பதை உத்தியோகபூர்வமானதென ஏற்கமுடியாது. எழுத்துமூலமான உறுதிமொழியொன்றை அவர் எனக்கு தரும் பட்சத்திலேயே ஜனாதிபதி தேர்தல் போட்டியிலிருந்து நான் விலகுவேன் என சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்.

பி-பி-ஸியின் சிங்கள சேவைக்கு நேற்று அவர் அளித்த பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியின் போது ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுறுவீர்கள் என்ற எண்ணத்தில் தான் இவ்வாறு ஒதுங்க நினைத்தீர்களா எனக் கேட்கப்பட்டபோது நாட்டிலுள்ள பெரும்பாலான இளம் சமுதாயத்தின் ஆதரவு குறுகிய கால எல்லையில் எமதுபக்கம் திரும்பும்போது இவ்வாதத்தை ஏற்க முடியாது என அவர் தெரிவித்தார்.

# காணாமற்போன படையினர் குறித்து புலிகளுடன் பேச கோரிக்கை

### படையினரின் பெற்றோர் விடுத்தனர்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இதுவரை காணாமல்போன முப்படைகளையும் சேர்ந்தவர்களைப் பற்றிய தகவல்களை அறிய உதவுமாறு, காணாமற்போன படையினரின் பெற்றோர்களைக்கொண்ட மனித வள பாதுகாப்பு சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அவ் அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற எமது பூரண ஆதரவை தெரிவிக்கின்றோம் பேச்சுக்களில் கலந்து கொள்பவர்கள் காணாமல் போன படையினர் பற்றிய தகவல்களை பெற்றுத்தர வேண்டும் இது எமக்கு மனநிம்மதியை அளிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வைத்தியர்கள் பதவி நீக்கம் மக்கள் ஆட்சேபம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பணிபுரிந்த இரண்டு வைத்திய நிபுணர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து இப்பகுதி மக்கள் ஆட்சேபனையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

பதில் நியமனம் செய்யாமல் இவ்விரு நிபுணர்களையும் பதவி நீக்கப்பட்டது இவ் வைத்திய சாலை நெருக்கடி நிலையைச் சந்திக்கும் எனவும் இவர்களது பதவி நீக்கம் ரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் இல்லையேல் பதில் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் இக்கண்டனம் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மத்திய அரசின் சுகாதார அமைச்சுக்கும் மாகாண சபைக்கும் பிராந்திய பணிப்பாளருக்கும் ஆட்சேபனைக் கடிதங்கள் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(போ)

# தொலைக்காட்சியில் அதிகம் தோன்றியவர் நிராகரிப்பு

### பேராசிரியர் திஸ்ஸகாரியவசம்

(கொழும்பு)

அரசின் உறுதிக்கு வீழ்ச்சிக்கு இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் அடிப்படையாக உள்ளன. தற்போது அரசியலுக்கும வெகுசனதொடர்பு துறைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இலத்திரனியல் ஊடகங்கள் அரசுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் அதே சமயம் பாதகமான நிலையையும் உருவாக்கக்கூடிய சக்தியை கொண்டுள்ளன என சிறிஜெயவர்த்தனபுரசிங்கள துறைதலைவர் பேராசிரியர் திஸ்ஸ காரியவசம் தெரிவித்துள்ளார்.

இப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையாளர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் அவர் உரையாற்றினார் நீண்ட நேரத்திற்கு தொலைக்காட்சி திரையில் தோன்றிய அரசியல் வாதிகளை மக்கள் நிராகரித்துள்ளனர்.

# செயலக அறைகளில் மழை நீர் ஒழுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கட்டடம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் கடும் மழையால் அதிகாரிகள் சிலரின் அறைகள் நீர் ஒழுக்கு விழுந்ததை காணக்கூடியதாக இருந்தது.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் யாழ். செயலகம் மீதான சிறிலங்கா விமானப் படையின் தாக்குதலை அடுத்து, சமீபத்தில் தான் செயலக கட்டடப் பகுதி புனரமைக்கப்பட்டமை தெரிந்ததே.

ஆயினும் யாழ். மேலதிக அரசாங்கஅதிபரும் தற்போது பதில் அரச அதிபராக பணிபுரிபவருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலின் அலுவலக அறையிலும் நீர் ஒழுக்கு காணப்பட்டது.

(தி,பா)

# பாடசாலையில் அமைந்த முகாமை அகற்ற கோரிக்கை

(மட்டக்களப்பு)

முறக்கொட்டாஞ்சேனை பாடசாலையில் இயங்கிவரும் இராணுவ முகாமை அரசு இடமாற்றி பாடசாலையை இயங்கச் செய்யவேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

இப்பாடசாலையில் 90ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பாடசாலை இன்று வரை தற்காலிகக் கொட்டிலிலும் மரநிழலிலுமே இயங்கி வருகிறது. இப் பாடசாலையிலிருந்து இராணுவத்தை அகற்றும்படி இப் பகுதி மக்கள் பலதடவை கோரியும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது


# கடத்தப்பட்ட வர்த்தகர் பொலிசாரால் மீட்பு

### கடத்தல்கும்பல்தலைவன் இராணுவ கப்டன்

அண்மையில் பம்பலப்பிட்டியில் கடத்தப்பட்ட பிரபல வர்த்தகர் சி ஐ-டி. பொலிசாரினால் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கடத்திச் சென்ற ... க்க 50 லட்சம் ரூபா பணத்தை வர்த்தகரின் மனைவியிடம் கோரியிருந்தது.

இவர் தற்போது பொலிசாரால் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இவரைக் கடத்திச் ... ணுவ கப்டன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வர்த்தகரைக் கடத்திச் சென்ற கும்பல் இராணுவ மற்றும் அதிரடிப்படை சீருடையில்

## 380-ம் நாள் நினைவஞ்சலி



### கடற்புலி லெப். பரந்தாமன்

### [அழகராஜா (கைடி) அன்ரனி லிவின்ஸ்ரன்]

அன்னை மடியில் 15-03-1974

ஆழக் கடலில் 09-10-1993

09 10.93 அன்று இவருடன் கடலிலே காவியமான ஏனைய கடற்புலிகளுக்கும் எமது அஞ்சலிகள். இவரின் நினைவாக 24.10 94 காலை 9 மணிக்கு கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதன் பின் வீட்டில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்களைக் கேட்டுக் கொளகின்றோம்.

- குடும்பத்தினர்

'ராஜா போட்டோ'
புலோலி கிழக்கு பருத்தித்துறை.

(6160)

## 380-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் மலராக:
15
03
1974

மனித வள பாதுகாப்பு சங் எமது பூரண ஆதரவை தெரி

## வைத்தியர்கள் பதவி நீக்கம் மக்கள் ஆட்சேபம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பணி புரிந்த இரண்டு வைத்திய நிபுணர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து இப் பகுதி மக்கள் ஆட்சேபனையை யும் கண்டனத்தையும் தெரி வித்துள்ளனர்.

பதில் நியமனம் செய்யாமல் இவ்விரு நிபுணர்களையும் பதவி நீக்கப்பட்டது இவ் வைத்திய சாலை நெருக்கடி நிலையைச் சந்திக்கும் என வும் இவர்களது பதவி நீக்கம் ரத்துச் செய்யப்பட வேண் டும் எனவும் இல்லையேல் பதில் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் இக்கண்ட னம் மூலம் தெரிவிக்கப்படு கிறது.

இது பற்றி மத்திய அரசின் சுகாதார அமைச்சுக்கும் மாகாண சபைக்கும் பிராந் திய பணிப்பாளருக்கும் ஆட் சேபனைக் கடிதங்கள் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(போ)

## வடக்கில் ஜனாதிபதி தேர்தல் கொழும்பில் நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் ஜனாதிபதி தேர் தலை நடத்துவதற்கான நட வடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ் அரச அதிபருடன் தேர்தல் ஆணையாளர் ஆராய்ந்து வருவதாகவும், தேவையா னால் யாழ் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரை கொழும்புக்கு வரவழைக்க வும் முயற்சிகள் மேற்கொள் ளப்படும் என தெரியவருவ தாகவும் அத்தினசரி மேலும் தெரிவித்துள்ளது

## புனர்வாழ்வுப் பகுதிமீது சங்கங்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

போர்க்கால சூழலில் மக் களின் தேவையையும், சேவை யையும் அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வுத் திணைக்களம் முற்றும் முழுதாக வியாபார நோக்கமாக இயங்குவதையே சங்கங்கள் எதிர்த்து வந்துள் ளன என தீவக கோட்ட கூட் டுறவு ஒன்றியத்தின் தலை வர் ப. கனகலிங்கம் தெரிவித் துள்ளார்.

இடம் பெயர்ந்தவர்களின் நிவாரண விநியோகத்தில் ப. நோ. கூ. சங்கங்களிற்கு புனர்வாழ்வு பகுதியினரால் வழங்கப்படும் இலாப வீதம் குறைக்கப்பட்டதை அடுத்து கூட்டுறவுச் சங்கங்கள் அதிரு ப்தியடைந்துள்ளன எனவெளி வந்த செய்தி குறித்து மேற் கண்டவாறு அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெ ளியிடுகையில், இடம் பெயர் ந்த மக்களின் உலர் உணவு விநியோகத்தில் கூட்டுறவு சங் கங்களுக்கு சேர வேண்டிய லாபத்தில் பொது மக்கள் கை யில் 50 சதம் கிடைப்பதிலும் முற்றிலும் இலவசமாக கிடை த்தாலும் பெரும் மகிழ்ச்சி அடைவது சங்கங்களே.

இடம்பெயர்ந்த மக்களு க்கோ அல்லது ரொக்க விற பனைக்கோ கொழும்பிலிருந்து புனர்வாழ்வுப் பகுதிக்கு அனு ப்பி வைக்கப்படுகின்ற சகல பொருட்களினதும் உண்மை யான கொள்விலையை மக்க களுக்கும் சங்கங்களுக்கும் தெளிவுபடுத்தினால் மிகவும் ஏற்புடையதாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

## திறந்து வைப்பு

(தென்மராட்சி)

மாணவர்களின் இடப் பற் றாக்குறையை தீர்க்கும் நோக் குடன் யா/சாவகச்சேரி மக ளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட 60 அடி நீள மும், 20 அடி அகலமுமான தற்காலிக கொட்டகை ஒன்று இன்று தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல் விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கத்தினால் வைபவரீதியாக திறந்து வைக் கப்படவுள்ளது. (86)

# கடத்தப்பட்ட வர்த்தகர் பொலிசாரால் மீட்பு

## கடத்தல்கும்பல்தலைவன் இராணுவ கப்டன்

அண்மையில் பம்பலப்பிட்டி யில் கடத்தப்பட்ட பிரபல வர்த்தகர் சி ஐ. டி. பொலி சாரினால் விடுவிக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கடத்திச் சென்ற சீருடை அணிந்த இனந்தெரி யாத கும்பல் இவரை விடுவி க்க 50 லட்சம் ரூபா பண த்தை வர்த்தகரின் மனைவி யிடம் கோரியிருந்தது.

இவர் தற்போது பொலிசா ரால் விடுவிக்கப்பட்டுள்ளதா கவும் இவரைக் கடத்திச் சென்ற கோஷ்டிக்கு தலைமை தாங்கிய முன்னாள் இரா ணுவ கப்டன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. வர் த்தகரைக் கடத்திச் சென்ற கும்பல் இராணுவ மற்றும் அதிரடிப்படை சீருடையில் வந்ததாக முன்னதாக கூறப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# இன்ரநஷனல் அலேட் அமைப்பு கொழும்பு வந்துள்ளது

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்விற் காக சமாதான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் இந்நிலை யில் உலக நிறுவனமான இன்ர நஷனல் அலேட் நான்கு நாள் விஜயமொன் றை மேற்கொண்டு கொழு ம்பு வந்துள்ளது

உலகில போர்களை நிறுத் தவும் மனித உரிமைகளை பேணுவதற்கும் இந்நிறுவ னம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந் நிறுவனம் அண்மைக்காலங்களில் இலங் கைபற்றி பல அறிக்கைகளை வெளியிட்டு வந்தது குறிப்பி டத்தக்கது இலங்கையில் மாகாணங்கள தோறும் தே சிய சமாதான மாநாடுகளை நடத்துவது குறித்து இவ்வ மைப்பு ஆராயும் எனத் தெரி விக்கப்படுகிறது.

கொழும்பு வந்துள்ள இக் குழுவினர் நேற்று நடைபெ ற்ற சமாதான பாதயாத்தி ரையிலும் கலந்துகொண்ட னர் அத்துடன் இன்றும் நாளை செவ்வாயும் சமா தான கருத்தரங்குகளிலும் இக்குழுவினர் கலந்து கொ ண்டு தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வர்.

இக்குழுவிற்கு கம்போடியா வைச் சேர்ந்த மகாகோஷா நந்ததலைமை தாங்குகிறார். பிலிப்பைன்சை சேர்ந்தபேரா சிரியர் எட்கார்சியா, வட அயர்லாந்தைச் சேர்ந்த கலா நிதி மாறிபிட்ஸ்டப் ஆகிய இருவரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்

# புதிய பிரதமரின் நடவடிக்கைக்கு கனிஷ்ட படை அதிகாரிகள் ஆதரவு

## இராணுவ உயர்மட்ட கட்டமைப்பில் மாற்றம்வரும்?

இராணுவத்தில் உள்ள இடைமட்ட உயரதிகாரிகள் பிரதமர் சந்திரிகா குமாரது ங்காவிற்கு தமது ஆதரவை வெளியிட்டுள்ளதாக கொழு ம்புத்தகவல் ஒன்று தெரிவிக் கின்றது.

பிரதமர் அண்மையில் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் படை அதிகாரிகளின் நடவடி க்கை குறித்து கண்டனம் வெளியிட்டிருந்தார். பிரதம ரின் இக்கருத்துகளுக்கு இரா ணுவத்தில் உள்ள மேல்மட்ட உயரதிகாரிகள் கடும் ஆட்சே பங்களை வெளியிட்டுள்ள இந்நிலையில் இடைமட்ட உயரதிகாரிகள் பிரதமரின் கருத்துகளுக்கு வரவேற்பு தெரிவித்து தமது ஆதரவை யும் தெரிவித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இராணுவத்தின் மேல்மட்ட உயரதிகாரிகள் முன்னைய அரசின் காலத்தில் மேற்கொ ள்ளப்பட்ட ஆயுத கொள்வன வுகளில் பெருமளவில் தரகுப் பணம் பெற்று லஞ்ச ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்ட தாக மேற்படி இடைமட்ட உயரதிகாரிகள் கருத்து வெளி யிட்டனர்.

புதிய அரசு மோசடியான மேற்படி ஆயுத கொள்வனவு கள் அனைத்தையும் தற் போது ரத்துச்செய்துள்ளமை யினால் மேல்மட்ட உயரதி காரிகள் இதனால் சினமடை ந்துள்ளதாகவும் குறிப்பிடும் இடைமட்ட அதிகாரிகள் புதிய பிரதமரின் இந்நடவ டிக்கைகளுக்கு பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின் இராணுவ உயர் மட்ட கட் டமைப்பில் பெரும் மாற்றங் களை அரசு மேற்கொள்ளவு ள்ளதாகவும் தெரியவருகிறது

## அனுஷ்டிப்பு

கோப்பாய் ஆசிரியர் கலா சாலை சமூகக்கல்வி மன்று இன்று திங்கள் ஐ நா தின த்தை கொண்டாடுகிறது. உலக அரசியலில் ஐ. நா பங்கு என்ற பொருளில் மு. திருநாவு க்கரசு உரையாற்றுவார். ஐ நா மாதிரிக் கூட்டத் தொடர் ஒன்றும் புதிர் போட் டியும் ஐ. நா குறித்த உரைச் சித்திரமும் நடைபெற ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

## 380-ம் நாள் நினைவஞ்சலி



தாயின்
மடியில்
மலராக:
15
03
1974

தாயக
மண்ணில
விதையாக:
9
10
1993

### லெப். பரந்தாமன்

[அழகராஜா (கைடி) அன்ரனி லிவின்ஸ்ரன்]

தம்பி!......

சொந்த மண்ணிலே சுதந்திரமின்றியே
வெந்த மக்களின் வேதனை கண்டுமே
பந்தமறுத்தே படைக்கல மெடுத்தே
பரந்தாமனாய் நீ புலியாக மாறினாய்!...

அலையாகி அண்ணனின் அடி ஏறினாய்!-எம்
அரணாகி அலையேறி நடமாடினாய்!
கனலாகி களமேறி சமராடினாய்!-கடல்
புலியாகி கடலன்னை மடி தேடினாய்!...

நீலக்கடலிடை நின்றபகைதேடி
நீளக்கடலெங்கும் நிமிர்ந்து திரிந்தாய்-இது
ஈழக்கடலென எண்ண வைத்தாய்-இன்று
ஆழக்கடலிடை நீ மறைந்தாய்!...

அடலேறாகி நீ அச்சமின்றி நின்றாய்!
கடலேறி களமாடி காவியம் படைத்தாய்!
படகேறிப் புறப்பட்டு போராடி வென்றாய்
-இன்று
படமாகி விட்டெங்கே பரந்தாமா சென்றாய்?...

கரும்பாக எம்முடன் கலந்த உடன் பிறப்பே
இரும்பாக மாற்றியும் இதயம் அழுகிறதே!
அரும்பாக மலராக உருவாகும் புலிகளிலே
திரும்பாத உன்முகம் தினம் காணுவோமடா!

நீங்காத உன் நினைவுகளுடன்
அண்ணன்மார்

பற்றிமாகிரி, பண்டத்தரிப்பு.
தற்போதைய முகவரி:
'ராஜா போட்டோ'
புலோலி, பருத்தித்துறை.

(சி-10563)

பேச்சுவார்த்தைகளில் தேசியக்கொடி

# தவறான தகவல்களால் சமாதானப்பேச்சு சீர்குலையும்

லயனல் பெர்னாண்டோ எச்சரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடந்த பேச்சுக்களின் போது பேச்சுவார்த்தை மேடையில் சிறிலங்கா தேசியக்கொடி வைக்க விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை என ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஒருவர் நேற்று முன் தினம் வானொலியிலும் ரூபவாஹினியிலும் உரையாற்றும் போது குற்றம் சாட்டினார். இக்குற்றச் சாட்டு தவறானது என அரசதரப்பு குழுவில் இடம்பெற்றவரும் தகவல்துறை அமைச்சின் செயலாளருமான லயனல் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

சிங்கக்கொடியை அரசகுழு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லவில்லை அதற்கு அவசியம் இல்லை யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதியாக இருக்கின்றது என்பதே இதற்கு காரணம் நாட்டிற்கு வெளியே பேச்சுக்கள் நடத்தினால் தான் தூதுக்குழு தேசிய கொடியை எடுத்து செல்வது அவசியம் என்றும் லயனல் தெரிவித்தார்

பூநகரி-சங்குப்பிட்டி பாதை ஆனையிறவுக்கு சமீபமாக உள்ளது என்று இந்த வேட்பாளர் தெரிவித்த கருத்தும் தவறாக வழிநடத்துவதாகும் இப்பாதை ஆனையிறவின் மேற்கு பகுதியிலிருந்து பல மைல் தூரத்தில் உள்ளது ஆனையிறவு முகாமிற்கு சமீபமாக அது இல்லை இது போன்ற அறிக்கைகள் தற்போதைய சமாதானப்பேச்சுகளுக்கு இடையூறு விளைவிக்கும் மக்களை தவறாக வழி நடத்திச்செல்லும் முயற்சியில இந்தசக்திகள்ஈடுபட்டுள்ளமை இப்போது தெளிவாகத் தெரிகிறது என்று லயனல் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளின் போது புலிக்கொடி மேடையில் வைக்கப்பட்டிருந்தமைக்கு கடந்த ஞாயிறன்று சண்டே ஐலண்ட் ஆசிரியர் கண்டனம் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

## 6 கோடி கப்பலுக்கு 9 கோடி நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்துடன் மோதுண்டு துறைமுகப் பகுதியைச் சேதப்படுத்திய கப்பலின் பெறுமதி 6 கோடி ஆனால் சேதம் 9 கோடி தர வேண்டும் என துறைமுகப் பகுதிகள் தெரிவித்துள்ளன எனவே ''கபறண'' கப்பல் கம்பனி மீது ஏற்கனவே வழக்குத்தாக்கல செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கப்பல் கம்பனி துறைமுகப்பகுதிக்கு 9 கோடி நஷ்டஈடாக செலுத்தவேண்டும என கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன

எனவே மேற்படி சேதமாக்கப்பட்ட பகுதியை தாங்கள் கட்டித்தருவதாக துறைமுகப் பகுதிக்கு கப்பல் கம்பனி அறிவித்தது இதனை அடுத்து துறைமுகப்பகுதிதமக்கு நஷ்டஈடாக பணம் தான் தரப்பட வேண்டும் என கோரி வருகின்றது.

தற்சமயம் இதற்கான வழக்கு கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெறுவதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையில் இக்கப்பல் இப்படியான இழுபறி நிலையில் வட பகுதிக்கான தனது பொருட்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட கொழும்புத் துறைமுகத்தில் பொருட்களை ஏற்றிக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## தவறிவிட்டது

திருமதி கனகரட்ணம் சிவமலர் என்பவருடைய அடையாள அட்டை, குடும்ப அட்டை, இலங்கைவங்கி கணக்கு வைப்பு புத்தகம் ஒரு மண்ணிற கலரி பசினுள் பல லி வீதியில் தொலைந்துவிட்டது இவற்றை கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கவும்.

கரந்தன்.
நீர்வேலி (6157)

## அறிவித்தல்

### வடஇலங்கை சங்கீத சபைத் தேர்வுகள் - 1995

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பபடிவங்களும் அறிவுறுத்தல்களும் 1994- 11- 01 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 1995 01 16 திங்கட்கிழமை வரை சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில பெற்றுக்கொள்ளலாம் படிவம் ஒன்றின் விலை: ரூபா 10/-

1995 -ம் ஆண்டுத் தேர்வுக்காக, சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில், அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். புகைப் படப்பிரதிகளிலும், தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப் படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன் 1995 01- 16 க்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில கொள்ளவும்

1995-ம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன

தரம் : 01 - ரூபா:50/- தரம் 02 - ரூபா:75/-
தரம்: 03 - ரூபா: 100/- தரம்: 04 ரூபா : 125/-
தரம்: 05 - ரூபா: 200/- தரம்: 06 - ரூபா: 250/-

மேலும் விபரங்கள் தேவைப்படின், சபைப்பணி மனையுடன் தொடர்புகொள்ளவும்

தி. பெரியதம்பி,
கல்விப்பணிப்பாளரும் (யாழ்: வலயம்: 01)
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

[சி-10564]

## குற்றப்பணம் அறவீடு

அனுமதியின்றி பனை மரம் தறித்தவரிடம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம குற்றப்பணம் அறவிட்டதோடு அவர்கள் தறித்த பனை மரங்களையும் பறிமுதல் செய்தது

கடந்த ஒகஸ்ட் மாதம் தென்மராட்சி பகுதியில் உள்ள மிருசுவில், கரம்பகம் ஆகிய இடங்களில் 8 பனை மரங்களும், தந்துவில் என்னும் இடத்தில ஒரு பனை மரமும் அனுமதியின்றி தறிக்கப்பட்டது கண்டு பிடிக்கப் பட்டு ஒரு பனைமரத்திற்கு 1000 ரூபா வீதம் மொத்த 9000 ரூபா குற்றபணம் அறவிடப்பட்டுள்ளது

மேலும் வடமராட்சியிலும் இவ்வாறு அனுமதியின்றி பனை மரம் தறிக்கப்பட்டு அதற்கான குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது எனவும் தெரிகின்றது. இப்பணம் பனைமீள நடுகைக்கு பயன்படுத்தப்படும்

## தாமுயர்வு

யாழ் மாவட்டத்தில்உள்ள சகல உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளையும்பிரதேச செயலகப் பிரிவுகளாக தரமுயர்த்த

## 7-ம் ஆண்டுநினைவலைகள்



செல்வி நமேகலா

மண்ணில் 21. 3. 1966
வானரர், விபுசனர் வலைவிரிப்பில்
விண்ணில் 30-10- 1987



கபடன் ரதீஸ
(நல்லதம்பி முத்தழகு)

மண்ணில் 06. 10. 1969
மண்மீட்பில் 24-10- 1987


எம் இனிய மக்களே உங்கள் ஏழாம் ஆண்டு நினைவு நாளில் நாம் உங்களது நினைவுகளை மீண்டும் நினைத்துப்பார்க்கின்றோம் ரதீஸ் உனது ஏழாம் ஆண்டுதனில் மாவீரர் எண்ணிக்கையோ ஏழுடன் மூன்று பூச்சியத்தை எட்டி விட்டதடா தமிழீழ மண்ணுக்காக என்றாலும் மாவீரரே எம் தலைவன் ஆற்றல்மிகு இறைமகன் அவன்பால் ஒளி பிறக்கும் நம்புங்கள் அந்நாளில் இன்று நாங்கள் உங்கள் கல்லறைகளில் சொரிந்து நிற்கும் மலர்களை மாவீரர்களே, அந்நாளில் நாங்கள் ஆனந்தக் கண்ணீராக உங்கள் கல்லறைகளில் சொரிவோம்.

இவ்வண்ணம் ஈழம் வேண்டி நிற்கும்,
மட்டக்களப்பு அம்மா, அப்பா, மற்றும்,
வேங்கை மைந்தர்கள்

தற்போதைய முகவரி
179/5, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம் (6170)

சிவமயம்

## 45-ம் நாள் நினைவலைகள்



மண் விரும்பி வந்த நாள்
10. 01. 1959

தான் விரும்பி சென்ற நாள்
10. 09. 1994

அமரர்

### இளையதம்பி அருட்செல்வன்

(கல்வி உத்தியோகத்தர் ப. நோ. கூ. ச. அச்சுவேலி)

பண்பின் சிகரமாய்
அன்பின் திருவுருவமாய்
பாசத்தின பிறப்பிடமாய்
எங்கள ஒளி விளக்காய்

எம்முடன் வாழ்ந்து இடையினில் பிரிவுத் துயர் தந்துவிட்டு தெய்வத்துள் தெய்வமான எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் நிஜமாக எம்முடன் வாழ முடியா விட்டாலும் எம்முடன் நிழலாக வாழ்கின்றீர்கள் என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர் பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

ஆவரங்கால், உங்கள் பிரிவால் துயருறும்
புத்தூர். அன்னாரின் குடும்பத்தினர்

(6159)

## 6ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
24-10-1966

வீரச்சாவு
24-10-1988

### கப்டன் சதீஸ்

(மூத்ததம்பி தெய்வேந்திரன்)

தாயகமாம் தமிழீழ மண்ணை மீட்கத் தக்கதொரு
தலைவன் வழிநாடிநின்றாய்
தூயதாம் மண்மீட்பு புனிதப்போரில் துணிச்சலுடன்
உன்வலிமை காட்டி நின்றாய்
தூயநின் வித்துடலைத் தானும் காணாது துயருறுகின்றோம்''

உன்பிரிவால் துயருறும்;
நாவற்காடு அப்பா அம்மா

1995-ம் ஆண்டுத் தேர்வுக்காக, சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில், அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். புகைப்படப்பிரதிகளிலும், தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன் 1995 01-16 க்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்

1995-ம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன

தரம்: 01 - ரூபா: 50/- தரம் 02 - ரூபா: 75/-
தரம்: 03 - ரூபா: 100/- தரம்: 04 - ரூபா: 125/-
தரம்: 05 - ரூபா: 200/- தரம்: 06 - ரூபா: 250/-

மேலும் விபரங்கள் தேவைப்படின், சபைப்பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்

தி. பெரியதம்பி,
கல்விப்பணிப்பாளரும் (யாழ்: வலயம்: 01)
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.
[சி-10564]

---

கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டு ஒரு பனைமரத்திற்கு 1000 ரூபா வீதம் மொத்த 9000 ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது

மேலும் வடமராட்சியிலும் இவ்வாறு அனுமதியின்றி பனை மரம் தறிக்கப்பட்டு அதற்கான குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது எனவும் தெரிகின்றது. இப்பணம் பனைமீள நடுகைக்கு பயன்படுத்தப்படும்

## தரமுயர்வு

யாழ் மாவட்டத்தில்உள்ள சகல உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளையும்பிரதேச செயலகப் பிரிவுகளாக தரமுயர்த்த அரசு முடிவுசெய்துள்ளது.

---


எம் இனிய மக்களே உங்கள் ஏழாம் ஆண்டு நினைவு நாளில் நாம் உங்களது நினைவுகளை மீண்டும் நினைத்துப்பார்க்கின்றோம் சதீஸ் உனது ஏழாம் ஆண்டுதனில் மாவீரர் எண்ணிக்கையோ ஏழுடன் மூன்று பூச்சியத்தை எட்டி விட்டதடா தமிழீழ மண்ணுக்காக என்றாலும் மாவீரரே எம் தலைவன் ஆற்றல்மிகு இறைமகன் அவன்பால் ஒளி பிறக்கும் நம்புங்கள் அந்நாளில் இன்று நாங்கள் உங்கள் கல்லறைகளில் சொரிந்து நிற்கும் மலர்களை மாவீரர்களே, அந்நாளில் நாங்கள் ஆனந்தக் கண்ணீராக உங்கள் கல்லறைகளில் சொரிவோம்.

இவ்வண்ணம் ஈழம் வேண்டி நிற்கும்,
மட்டக்களப்பு — அம்மா, அப்பா, மற்றும்,
வேங்கை மைந்தர்கள்

தற்போதைய முகவரி
179/5, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்

(6170)

---



24-10-1988

## கப்டன் சதீஸ்

(மூத்ததம்பி தெய்வேந்திரன்)



தாயகமாம் தமிழீழ மண்ணை மீட்கத் தக்கதொரு
தலைவன் வழிநாடிநின்றாய்
தூயதாம் மண்மீட்பு புனிதப்போரில் துணிச்சலுடன்
உன்வலிமை காட்டி நின்றாய்
தூயநின் வித்துடலைத் தானும் காணாது துயருறுகின்றோம்''

உன்பிரிவால் துயருறும்;
நாவற்காடு — அப்பா அம்மா
வரணி (6152) — சகோதர, சகோதரிகள்.

---

# 380-ம் நாள் நினைவலைகள்

## வங்கக் கடலிலே வரலாறாகிய எங்கள் நாயகர்கள்

|  |  |  |  |  |  |
|---|---|---|---|---|---|
| கப்டன் | கப்டன் | லெப்டினன்ட் | கப்டன் | லெப்டினன்ட் | லெப்டினன்ட் |
| **நெடுமாறன்** | **பாரதிதாசன்** | **பரந்தாமன்** | **தவநேசன்** | **கிரன்** | **வர்மன்** |

ஆழக் கடலிலே மீளாத்துயில் கொண்ட காவிய நாயகர்களே!
நீங்கள் விதையாக விழுந்து விடுதலைத் தீ மூட்டியதால்
வெளிச்சத்தில் தெரிகிறது விடியலின் பாதையது!...
வெஞ்சினம் கொண்டெழும் வேங்கைகளின் வீரத்தால்
வெனறிடும் ஈழத்தின் வெற்றிநாள் காண நீவீர்!
விழுந்த வீரப் புலிகள் சூழ வந்து நிற்பீர் வானத்தில்
அன்று அசைந்திடும் புலிக்கொடியால் அடங்கட்டும் உங்கள் தாகம்!...,

**உங்கள் நினைவினில் நனையும்**

(6161)

**பருத்தித்துறை துறைமுக பொதி சுமக்கும் வாகன சேவை ஒன்றியம்**

## சிந்தனைக்கு..

இன்றியமையாத தேவையின் வலிமையை எதிர்த்து நிற்க முடியாது;

- ஈஸ்கிலஸ்

ஈழநாதம்

61, மகேந்திர வீதி, யாழ்ப்பாணம் 24-10-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபாற்பெட்டி எண் - 63

# இடம் பெயர்ந்தோருக்கு புதிய நெருக்கடி

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களுக்குப் பதிலாக அதற்கான பணத்தை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல், மோசடிகள் என்பனவற்றை இதன்மூலம் நீக்க முடியும் என்பதே அரசாங்கம் கூறும் விளக்கமாகும்.

அரசாங்கம் கூறுவது போன்று நிவாரணப்பொருள் விநியோகத்தில் பெரும் மோசடிகள், துஷ்பிரயோகங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டன என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். இதனால் இடம்பெயர்ந்த மக்கள் பல துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி வந்தமையும் உண்மைதான்.

ஆயினும் அதற்காக பொருட்களுக்குப் பதில் பணத்தை வழங்குவதென்பது ஏற்புடைய விடயமாக தெரியவில்லை. இது முன்னரைவிட மோசமாக மக்களைப் பாதிக்கும் என்றே கூறவேண்டும். அரசாங்கம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சிறுபகுதியில் பரீட்சித்து விட்டு இத்திட்டத்தை அமுல்படுத்த முனைவது தப்பானதொரு கணிப்பீடே ஆகும்.

பொதுவாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன் காரணமாக பொருட்களின் விலையும் மிக உயர்வாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் பொருட்களை வழங்காது பணத்தை வழங்கி விடுவதால் மேலும் பொருட்களுக்கு தட்டுப்பாடும், விலை ஏற்றமுமே ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

ஏனெனில் நிவாரணத்திற்கு எனப் பொருட்கள் அனுப்பப்படும் பட்சத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பொருட்கள் கிடைப்பதால் அவர்கள் வெளிச் சந்தைப் போட்டியில் சிக்க மாட்டார்கள். ஏதோ ஒருவகையில் அவர்களுக்குப் பொருள் கிடைக்கும். அவை அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்க உதவக் கூடும்.

அதிலும் அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட பொருட்களுக்குக் கப்பல் கட்டணம் அறவிடப்படவில்லை அதாவது பொருட்களுக்கான போக்குவரத்துச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. இன்றைய புதிய திட்டத்தின்படி போக்குவரத்துச் செலவீட்டை இடம்பெயர்ந்த மக்களே ஏற்க வேண்டிய கட்டாயமும் ஏற்படும்.

# யாழ் மாவட்டத்தில் 9 டாக்டர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற பணிப்பு

## 9 பொது சுகாதார பரிசோதகரும் ஓய்வு

(தென்மராட்சி)

யாழ் மாவட்டத்தில் சேவையாற்றும் 60 வயதைக் கடந்த ஒன்பது டாக்டர்களும், ஒன்பது பொது சுகாதார வைத்திய அதிகாரிகளும் சேவையிலிருந்து ஓய்வு பெற சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது, எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதியிலிருந்து இவர்களை சேவையிலிருந்து ஓய்வு பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. அதற்கான கடிதங்களும்இவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

60 வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்களை ஓய்வுபெறச் செய்யும் புதிய அரசின் முடிவிற்கமைய இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியர்கள் ஓய்வுபெறுவதால் யாழ் மாவட்டத்தில் டாக்டர்களுக்கு பற்றாக்குறையான இவ்வேளையில் பெரும் நெருக்கடி ஏற்படும் என சுகாதார வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

ஓய்வு பெற பணிக்கப்பட்ட டாக்டர்களினதும் பொது வைத்திய அதிகாரிகளினதும் விபரம் வருமாறு;

டாக்டர் எஸ். பத்மநாதன் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை

டாக்டர் கே. இராஜலிங்கம் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை

டாக்டர் எஸ் சந்திரசேகரம்பிள்ளை மாவட்ட வைத்திய அதிகாரி ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை

டாக்டர் வி. ஜெகசோதி பல் வைத்தியர் மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை

டாக்டர் ரி. வெற்றிவேல் யாழ் மாவட்ட பதிவு வைத்தியஅதிகாரி பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்.

டாக்டர் என் சுப்பிரமணியம் பதிவு வைத்திய அதிகாரி மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை

டாக்டர் பி. மகாலிங்கம் பதிவு வைத்திய அதிகாரி சுற்றியற்கூறுபளை

டாக்டர் சி. தனபாலசிங்கம் கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி

டாக்டர் எஸ். பரராசசிங்கம் பல் வைத்திய அதிகாரி நல்லூர்

பொது சுகாதார பரிசோதகராக சேவையாற்றும்:

திரு. எ. செல்லையா பொது சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சாவகச்சேரி

திரு. கே எஸ். குமாரசாமி பொது சுகாதார பரிசோதகர் கச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கோப்பாய்

திரு. கே. கார்த்திகேசு பொது சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கோப்பாய்

திரு. கே. கனகசபை பொது சுகாதார பரிசோதகர் மார்பு நோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம்

திரு எஸ் இராஜநாயகம்பிள்ளை பொது சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்தியசாலை மானிப்பாய்

திரு. கே. வைத்தீஸ்வரன் சுகாதார போதனாசிரியர் சுகாதார வைத்திய காரியாலயம் மானிப்பாய்

திரு. எஸ். குணரத்தினம் பொது சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய காரியாலயம் மானிப்பாய்

என். இராஜதுரை பொது சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய அலுவலகம் மானிப்பாய்

எ சிவலிங்கம் வைத்திய ஆய்வு கூட பரிசோதகர் சுகாதார வைத்திய காரியாலயம் சாவகச்சேரி (86)

# கிறிஸ்தவ அமைப்புகளின் நகல் திட்டம் கையொப்பமிட ஏன் மறுத்தேன்?

## அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோ விளக்கம்

(கொழும்பு)

கிறிஸ்தவ மத நிறுவனங்கள் சில இணைந்து இனப்பிரச்சினை தீர்வுக்காக தயாரித்த ஒரு நகல் திட்டத்தில் அங்கிலிக்கன் ஆயர் அதி வண. கெனத் பெர்னான்டோ கைச்சாத்திட மறுத்துள்ளார் என ஈழநாதம் வெளியிட்ட செய்தி குறித்து அவர் விளக்கம் தந்துள்ளார்.

மேற்படி இனப்பிரச்சினை தீர்வு குறித்த ஆலோசனை நகல் திட்டம் பிரதமர் சந்திரிகாவிற்கு சமர்ப்பிக்கப்படவிருந்ததாகவும் இவ்வாலோசனைத் திட்டத்தில் சமஷ்டி என்ற வார்த்தை காணப்படுவதால் தாம் அதை ஆட்சேபித்ததாகவும் ஆயர் கெனத் தெரிவித்தார்.

சமஷ்டி என்ற சொற்பதம் சிங்களவர்களிடையே சினம் எழுப்பும் ஒரு பதமாக இருக்கின்றது; இந்நிலையில் சமஷ்டி என்ற பதம் அதில் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். சமஷ்டித் திட்டத்திற்கு அதிகமாகக்கூட தமிழர்க்கு சுயாட்சி அதிகாரம் கிடைத்தாற்கூட சமஷ்டி என்ற பதம் நீக்கப்பட்டால் அது சிங்களவர்களை அதிகமாகப் பாதிக்க மாட்டாது எனவே அந் நகல் திட்டத்தில் சமஷ்டி என்ற பதத்தை நீக்கிவிடுமாறு நான் கோரியதற்கு அந் நகலைத் தயாரித்த கிறிஸ்தவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மறுத்து விட்டனர்.

அடுத்ததாக அவர்களின் நகல் திட்டத்தில் 1958 இல் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட சமஷ்டி முறையிலான அதிகார பகிர்ந்தளிப்பு கூட காணப்படவில்லை. தமிழர்கள் பண்டா - செல்வா ஒப்பந்தத் திட்டங்களையே இன்று நிராகரிக்கும் அளவுக்கு வந்துள்ள நிலையில் பல தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் விலை மதிக்கப்பட முடியா பல உயிர்களை காவு கொடுத்த பின்னர் இத்தகைய குறைந்தஅம்ச அதிகார பரவலாக்கலுக்கு இணங்க மாட்டார்கள் என்றும் நான் கிறிஸ்தவ அமைப்பு பிரதிநிதிகளிடம் எடுத்து விளக்கினேன். விடுதலைப் புலிகளுடன் நான் நடத்திய பேச்சுகளின்போது அவர்கள் என்னிடம் முன்வைத்த குறைந்தபட்சக் கோரிக்கைகள் கூட இந்நகலில் காணப்படவில்லை இதன் காரணமாகவே நான் அந்நகலில் கையொப்பமிட மறுத்தேன் என ஆயர் கெனத் பெர்னான்டோ விளக்கமளித்துள்ளார்.

# விமானப்படையில் ஹெலிகப்டர்பிரிவுவிஸ்தரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி பிரிவு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது; ரஷ்ய எம் ஐ ரக உலங்குவானூர்திகளை விமானப்படை புதிதாக கொள்வனவு செய்தது முதல் இப்பிரிவு விஸ்தரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எம் ஐ - 8 ரக பாரிய உலங்குவானூர்திகளை சிறிலங்கா விமானப்படை கடந்த அரசின் காலத்தில் கொள்வனவு செய்ய கட்டளை அனுப்பியிருந்தது: இந்த ரக உலங்குவானூர்திகள் தற்போது

# ஒய்வு பெற்ற அதிபருக்கு இதுவரைஒய்வூதியம்இல்லை

(யாழ்ப்பாணம்)

கடமையில் இருந்து ஓய்வு பெற்ற கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவருக்கு 'ஓய்வு பெற்று சுமார் ஒன்பது மாதங்களாகியும் எந்தவித ஓய்வூதிய கொடுப்பனவும் கிடைக்கப் பெறவில்லை; இதுபற்றி மேலும் தெரியவருவதாவது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த பிரஸ்தாப அரச சேவையா... கிடைக்கப் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக இவர் கல்வித் திணைக்களத்தை அணுகிய போது இவரது கோவைகள் எதுவும் திணைக்களத்தில் இல்லையென்று கூறப்பட்டதாகவும் மேலும் தெரிய வருகின்றது. ஒய்வூதிய விடயமாக கொழும்பு வரை சென்றவருக்கு அங்கும் கைவிரிப்புத்தானாம் இறுதிச் சேவைக்...

## தீவக கிராம சேவகர்கள் திருமலையில் தவிப்பு

மேலும் பொருட்களுக்கு தட்டுப்பாடும், விலை ஏற்றமுமே ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

ஏனெனில் நிவாரணத்திற்கு எனப் பொருட்கள் அனுப்பப்படும் பட்சத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பொருட்கள் கிடைப்பதால் அவர்கள் வெளிச் சந்தைப் போட்டியில் சிக்க மாட்டார்கள். ஏதோ ஒருவகையில் அவர்களுக்குப் பொருள் கிடைக்கும். அவை அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்க உதவக் கூடும்.

அதிலும் அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட பொருட்களுக்குக் கப்பல் கட்டணம் அறவிடப்படவில்லை அதாவது பொருட்களுக்கான போக்குவரத்துச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. இன்றைய புதிய திட்டத்தின்படி போக்குவரத்துச் செலவீட்டை இடம்பெயர்ந்த மக்களே ஏற்க வேண்டிய கட்டாயமும் எழுகின்றது.

இந்நிலையானது தமக்கு கிடைக்கும் நிவாரணத்தில் ஒருபகுதியை போக்குவரத்துச் செலவிற்கு அவர்கள் ஏதோ ஒருவகையில் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக யாழ் குடாநாட்டில் ஒரு கிலோ பொருளுக்கு கப்பல் கட்டணமாக நான்கு ரூபா அறவிடப்படுவது சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இதேசமயம் பணமாக நிவாரணம் வழங்கப்பட்டால் மக்கள் தமக்கு விருப்பமான தெரிவைச் செய்யலாம் என்பது ஏற்புடைய வாதமாக முன்வைக்கப்படக் கூடியதுதான். கடந்த கால அனுபவங்களை நோக்கும் போது சிலர் இதை விரும்பவும் கூடும். ஏனெனில் கடந்த காலத்தில் நிவாரணப் பொருட்கள் என்ற ரீதியில் பாவனைக்குதவாத பொருட்கள் பல வழங்கப்பட்டதும் உண்டு. அத்தோடு கூட்டுறவுச் சங்கத்திடமோ அன்றி புனர்வாழ்வுப் பகுதியிலோ கையிருப்பில் உள்ள பொருட்களை மட்டுமே நிவாரணத்திற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

ஆனால் பணமாக வழங்கப்படும் பட்சத்தில் அவ்வாறான நிர்ப்பந்தம் நிவாரணம் பெறுபவர்களுக்கு இல்லாது போகலாம். ஆனால் இதற்காக அவர்கள் இழக்க வேண்டியதோ நிவாரணப் பொருள்களின்பங்காகும். ஆகையினால் இதுவரை கிடைத்த சொற்ப நிவாரணத்தில் வாழ்க்கையை நடத்தி வந்த அம் மக்கள் மேலும் சிக்கல்களை அனுபவிக்க வேண்டி வரலாம்.

ஆகையினால் மோசடிகள் ஊழல்கள் இடம்பெறுகின்றன என்பதற்காக இலகுவான நிர்வாக வழிகளை கண்டறிவது அதற்கான வழிமுறை அல்ல. ஊழல், மோசடிகளை களைவதற்கும் மக்கள் மீது சுமைகள் ஏறாமல் இருக்கும் வகையிலேயே நிர்வாகங்கள் சீரமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாது இதே வழியைத்தான் அரசாங்கம் கைக்கொள்வதாக இருப்பினும் தரமான அத்தியாவசியப் பொருள்களை வெளிச்சந்தையில் மிகக் குறைந்த விலையில் - அதாவது கொழும்பு விலையை ஒத்ததாகவோ அன்றி கூட்டுறவுச் சங்கங்களில் முன்னர் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்ட விலையிலோ - வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இல்லாதுவிடில் அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது தப்பான நோக்கிலேயே பார்க்கவும் விமர்சிக்கவும் வழி ஏற்படும். அதாவது இராணுவக் கட்டுப்பாட்டு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பொருளாதாரத் தடையை மேலும் இறுக்குவதற்கு மேற்கொள்ளும் முயற்சி எனக் கூறப்படுமானால் அதுவும் தப்பில்லாதது போன்றே இருக்கும்.

# விமானப்படையில் ஹெலிகப்டர்பிரிவுவிஸ்தரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி பிரிவு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. ரஷ்ய எம் ஐ ரக உலங்குவானூர்திகளை விமானப்படை புதிதாக கொள்வனவு செய்தது முதல் இப்பிரிவு விஸ்தரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எம் ஐ - 8 ரக பாரிய உலங்குவானூர்திகளை சிறிலங்கா விமானப்படை கடந்த அரசின் காலத்தில் கொள்வனவு செய்ய கட்டளை அனுப்பியிருந்தது. இந்த ரக உலங்குவானூர்திகள் தற்போது கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானப்படையிடம் ஏற்கனவே உள்ள அமெரிக்க பெல் ரக உலங்குவானூர்திகள் மற்றும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட ரஷ்ய எம் ஐ8 ரக உலங்குவானூர்திகளுடன் புதியவையும் சேர்க்கப்பட்டு விமானப்படையில் தனியாக உலங்குவானூர்திப் பிரிவு ஒன்று தற்போது அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு தாக்குதல் நடவடிக்கைகளிலும், துருப்புக்களைக் காவிச் செல்வதிலும் விமானப்படைக்கு உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தீவக கிராம சேவகர்கள் திருமலையில் தவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையால், தீவுப்பகுதிகளில் கிராமசேவையாளர்களாக தெரிவு செய்யப்பட்ட 24 பேர் தீவுப்பகுதிக்கு சென்று வேலையைப் பொறுப்பேற்க முடியாத நிலையில் திருகோணமலையில் தங்கியுள்ளனர். தீவுப்பகுதிக்கு திருகோணமலையிலிருந்து செல்லும் கப்பலில் பயணம் செய்யும் நோக்கமாக இவர்கள் திருமலை வந்திருந்தனர்.

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த இவர்கள் தீவுப்பகுதி சென்று நியமனத்தைப் பொறுப்பேற்குமாறுமாகாண சபையால் இவர்கள் கோரப்பட்டிருந்தனர்.

எங்களோடு தெரிவு செய்யப்பட்ட ஏனையபகுதி கிராம சேவகர்கள் பதவியேற்று 3 மாதங்களாகிவிட்டன ஆனால் நாங்கள் போக்குவரத்து வசதியின்றி எமது கடமைக்கு செல்லமுடியாமல் இருக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளனர்.

# 600 தடுப்புக் காவல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவர்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைய தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 600 தமிழ் - சிங்கள இளைஞர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 200 இளைஞர்களை விடுவிக்குமாறு பதில் சட்டமா அதிபர் பணித்துள்ளார். மேலும் 400 இளைஞர்களை விடுவிப்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 200 இளைஞர்களில் 74 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்குகள் இனி வாபஸ் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைப் பெண்ணை கொடுமைப்படுத்தியவர்

## அமெரிக்காவில் சிறைத்தண்டனை

(தென்மராட்சி)

அமெரிக்க நாட்டில் இலங்கைப் பணிப்பெண்ணை கொடுமைப்படுத்திய குவைத் நாட்டவர் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

இலங்கையைச் சேர்ந்த வசந்தா கேதரா (வயது 27) என்னும்இப்பணிப்பெண்ணை மாடி வீட்டிலிருந்து எங்கும் போகாமலும் ஒரு நாளைக்கு ஒரு துண்டு பாண் வீதம் கொடுத்து கொடுமைப்படுத்திவந்த குவைத் நாட்டைச் சேர்ந்த தலால் அல் ஸாங்கி என்னும்31 வயதுடைய பட்டதாரி மாணவருக்கு அமெரிக்க மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஸொபஸ் தண்டனையாக ஒரு வருடச்சிறையும்13,415அமெரிக்க டொலர்கள் அபராதமும் விதித்தார். (86)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.10.24**
**திங்கள் இரவு**

08 01 - தளிர்கள்- சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - தாயகப்பாடல்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம் - பாலர் கல்விக்கழக தலைவர் திரு ஆறுமுகம் செல்லையா அவர்களுடனான செவ்வி,

**1994.10.25**
**செவ்வாய் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.

# இதுவரைஓய்வூதியம்இல்லை

(யாழ்ப்பாணம்)

கடமையில் இருந்து ஓய்வு பெற்ற கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவருக்கு ஓய்வு பெற்று சுமார் ஒன்பது மாதங்களாகியும் எந்தவித ஓய்வூதிய கொடுப்பனவும் கிடைக்கப் பெறவில்லை. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த பிரஸ்தாப அரச சேவையாளர் இவ்வாண்டு ஜனவரி மாதம் 1-5ம்திகதி தொடக்கம் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றதாகவும். இன்றுவரை இவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக இவர் கல்வித் திணைக்களத்தை அணுகிய போது இவரது கோவைகள் எதுவும் திணைக்களத்தில் இல்லையென்று கூறப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. ஓய்வூதிய விடயமாக கொழும்பு வரை சென்றவருக்கு அங்கும் கைவிரிப்புத்தானாம் இறுதிச் சேவைக் காலத்தில் புங்குடுதீவு கொத்தணி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. க.பேரம்பலம் அவர்களுக்கே இந்த துர்ப்பாக்கிய நிலை என்பது குறிப்பிடத்தக்கது (22)

# தேசிய பாடசாலை நிர்வாகம் மாகாண கல்வி அமைச்சுக்கு

(நல்லூர்)

மத்திய கல்வி அமைச்சு இதுவரை தேசிய பாடசாலைகளை நிர்வகித்து வந்தது தற்போது இத்தகைய நிர்வகிப்பு மாகாண கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் தேசிய பாடசாலைகளை நிர்வகிப்பதற்கான பிரிவு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ள அசாதாரண நிலைவரம் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் தேசிய பாடசாலைகளை நிர்வகிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் கால அட்டவணை தயாரித்தல், வசதிகள், சேவைகள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், பௌதிக வளங்கள், தரவுகள், வருடாந்த விபரத்திரட்டும் பொருட் கையிருப்பும், புலமைப் பரிசில்கள், முறைசாராக் கல்வி, ஆளணியினர், மேற்பார்வை. பாடசாலை அனுமதி ஆகிய விடயங்களை மறு அறிவித்தல் வரை யாழ்ப்பாணத்தில் இயங்கும் வலயக் கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் க. தியாகராசா தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அறிவித்துள்ளார். (17)

# சாவ. லயன்ஸ் கழகம் ஐ.நா.தினம் அனுஷ்டிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்தும் ஐக்கிய நாடுகள் தினம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் லயன்ஸ் கழகத்தின் சாவகச்சேரி தலைவர் திரு. ரி.நவரட்னராசா தலைமையில் இடம்பெறவுள்ளது

இதற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக அதிபர் திரு. அ.பொ.செல்லையா அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இதே வேளை அண்மையில் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் பாடசாலைகள் ரீதியாக நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சம்பந்தமான பொது அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டி, விவாதம் என்பனவற்றில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு பரிசில்களும் இன்று வழங்கப்படவுள்ளன. (86)

யாழ். அரசாங்க அதிபர்

## மாணிக்கவாசகர் நவம்பர் 10 முதல் ஓய்வு

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவர் யாழ். மாவட்டத்தில் கடந்த 3 வருடங்களிற்கு மேலாக அரச அதிபராகச் சேவையாற்றி வந்துள்ளார். தற்சமயம் கொழும்பில் மருத்துவ விடுப்பில் இவர் தங்கியுள்ளார்.

இவருடைய மருத்துவ விடுப்பு எதிர்வரும் 28ஆம திகதியுடன் முடிவடைகின்றது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி இவர் தமது அரச அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா, தி)

## மன்னாருக்கு முஸ்லிம் அரச அதிபரை நியமிக்குக

### அஷ்ரப்பிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திற்கு முஸ்லிம் ஒருவரை அரச அதிபராக நியமிக்கும்படி மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரமூர்த்தி அபூபக்கர் அமைச்சர் அஷ்ரப்பிற்கு கோரிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தற்சமயம் மன்னார் மாவட்டத்தில் அரச அதிபராக கணேஸ் என்ற தமிழர் கடமையாற்றிவருகின்றார். என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் முஸ்லிம் ஒருவரே அரச அதிபராக மன்னாருக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக செயற்பட்டு வருவதாக நம்பகரமாக அறிய வருகின்றது.

இவருடைய இக் கோரிக்கை அடங்கிய அவசர கடிதம் ஒன்று அண்மையில் புனர்வாழ்வு கப்பல்துறை அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் கவனத்திற்கென கொண்டுவரப்பட்டுள்ளதாக அறியவருகின்றது (பா) (தி)

## புதிய அரசாங்க அதிபர்கள் நியமனங்கள் ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அரசாங்க அதிபர் பதவிக்கான புதிய நியமனங்கள் பின்போடப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் உடனடியாக புதிய மாற்றங்களோ அல்லது நியமனங்களோ ஏற்படும் சாத்தியமில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்திற்கு அரச அதிபராக நியமனம் செய்யப்படுவதை அடுத்து கிளிநொச்சி வெற்றிடமாகவே இருக்கும் என எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன,

தற்போது முல்லைத்தீவு அரச அதிபராக பணிபுரியும் திரு தர்மலிங்கம் கிளிநொச்சி பதில் அரசாங்க அதிபராக பணி செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது. (தி,பா)

## பேச்சுகளில் முஸ்லிம்பிரதிநிதி இன்மை குறித்து கவலைப்படத் தேவையில்லை

### அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறும் முதலாம், இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப கட்டப் பேச்சுக்களே நடைபெறுகின்றன இதில் முஸ்லிம்கள் இல்லையென அலட்டிக்கொள்ள தேவையில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்ளாத எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் நீங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என அண்மையில் கூறியிருந்தீர்கள் அப்படியாயின் அதன் அர்த்தம் ஏனையவர்களுடன் பேசுவதில் பயனில்லை என்பதா?

பதில்: இல்லை பிரபாகரனில்லாத வேறு யாருடனும்பேசலாம் அவ்வாறு பேசுபவர்கள் தம்முடைய குரலாக இருக்கின்றார் என பிரபாகரன் ஏற்றுக்கொள்வராயின் பிரபாகரனுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை மற்றவர்களுடன் பேசி முடிவுக்கு வந்த பின்பு தூதுக்குழுவுடன் பேசினீர்கள் என விடுதலைப்புலிகள் கருதுகின்ற நிலை ஏற்படக்கூடாது பிரபாகரனுடன் தான் பேசமுடியும் என கூறியது ஒரு கட்சித் தலைவர் இன்னொரு கட்சித் தலைவருடன் தான் பேசமுடியும் அதுவே அரசியல் சம்பிரதாயம் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வருவதாயின் அதுவேகாத்திரமானதாக இருக்கும் அதேவேளை விடுதலைப் புலிகளின் 2ஆம், 3ஆம் கட்டத் தலைவர்கள் கலந்து கொள்வதாயின் முஸ்லிம் காங்கிரசின் 2ஆம், 3ஆம் கட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடலாம்.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே தற்போது நடைபெறும் பேச்சுக்களில் முஸ்லிம் எவரும் இடம் பெறாதது குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: முதலாம், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பகட்டப் பேச்சுகளே நடைபெறுகின்றன இதில் முஸ்லிம்கள் இல்லையென அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. முஸ்லீம்கள் திருப்திப்படாத முடிவு வெற்றியளிக்காது. பேச்சுக்களில் தீர்வாக உள்ள அதிகார அலகுகள் பற்றிப் பேசும்போது தான் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் இருக்கவேண்டும். சமபங்குள்ள ஒரு சமுதாயமாக வாழ்வதற்கு அதிகாரப் பரவலாக்கத்தின் அலகு எப்படி அமையவேண்டும் என்பதிலேயே தங்கியுள்ளது. அவ் அதிகார அலகு விடயத்தில் முஸ்லிம்களுக்கு தமிழர்களுடன் சமனானபங்கு வேண்டும் இந்த விடயத்தை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது. பிரதமருக்கும் இது தெரியும். இந்த விடயத்தில் குறிக்கோளுள்ள ஒரே யொரு கட்சி முஸ்லிம் காங்கிரஸ் ஆகும்-

கேள்வி: இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஏதாவதுதீர்வொன்றை முன்வைக்குமா?

பதில்; இந்தப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் காங்கிரசின் தீர்வு இதுவென்று கூற முடியாது. மற்றவர்கள் முன்வைக்கும் தீர்வுகளை அலசி ஆராய்ந்து முஸ்லிம்களைப் பாதிக்காதவகையில் இத்தீர்வுகளை வழிநடத்துவதும் நெறிப்படுத்துவதும்தான் முஸ்லிம் காங்கிரசின் பணியாகும்.

## கடற்படை மீது புலிகள் தாக்கலாம்

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தமொன்றுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், புலிகள் வடகடலில் இன்னுமொரு தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளலாம் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சந்தேகத்திற்கிடமான வகையில், வடகடலோரங்களில் படகுகளின் நடமாட்டங்கள் காணப்படுவதாகவும், படையினர் இவற்றை தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கரும்புலிப்படையினர் அல்லது கடற்புலிகள், இவற்றின் மூலம், மன்னார், மாதகல் கடற்பகுதிகளில் தாக்குதலை நடத்தலாம் என படையினர் சந்தேகப்படுவதாகவும், இதையடுத்து கற்பிட்டி பகுதியில் மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாம் என பணிக்கப்பட்டு இருப்பதாகவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புளொட் தேசத்துரோகிகள் இருவருக்கு மரண தண்டனை

விடுதலைப் புலிகளின் வீரச்சாவிற்கு காரணமாக இருந்த இரண்டு 'புளொட்' தேசத்துரோகிகளுக்கு மட்டக்களப்பு கரவெட்டி என்னும் இடத்தில் வைத்து விடுதலைப்புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி இரவு விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட முத்துப்பிள்ளை குலேந்திரன் (வயது 20) நாவற்காடு மட்டக்களப்பு இரத்தினசிங்கம் விவே (வயது21) கரவெட்டி மட்டக்களப்பு என்னும் இருவருக்குமே மரணதண்டனை வழங்கப்பட்டது.

## சாண்டோ துரைரத்தினம் நேற்று காலமானார்

(யாழ்ப்பாணம்)

வீரசாதனையாளர் எனமக்களால் கருதப்படும்சாண்டோ எம் துரைரத்தினம் நேற்று காலமானார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் காலை 6 மணியளவில் அங்கு மரணமானார் பருத்தித்துறையைச் சேர்ந்த 53 வயதான மறைந்த சாண்டோ எம். துரைரத்தினம் வடதமிழீழத்தின் பலபகுதிகளிலிலும் பொதுச் சேவை நிதிக்காக பலவீரதீரச் செயல்களை மக்களுக்கு காண்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூரே ஈடுபடார்

சிறிலங்காவின் முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே ஜனாதிபதி தேர்தல் பிரசார வேலைகளில்ஈடுபடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பிரசார உதவி ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையற்றது என பலர் கருதுவதால் அவர் அப்பணியிலிருந்து ஒதுங்குவதைத் தவிர வேறு வழி இல்லை என இவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வாழைச்சேனை டெலோ பொறுப்பாளர் மீது சூடு

### சயனைட் அருந்தி இளைஞர்மரணம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பிரதேச டெலோ பொறுப்பாளரும் பிரதேசசபை அங்கத்தவருமான எஸ் விஸ்வானந்தன் (முகுந்தன்) கடந்த வியாழன் காலை வாழைச்சேனை நகரில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து இராணுவம் அப்பகுதியை சுற்றிவளைத்தபோது இளைஞர் ஒருவர் இராணுவத்தினருக்கு கைக்குண்டு வீசிவிட்டு சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என்றும் கைக்குண்டு வீச்சில் இரு படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது இச்சம்பவம் வாழைச்சேனை மக்கள் வங்கிக்கு முன்பாக காலையில் இடம்பெற்றது இச்சம்பவத்தினால் வாழைச்சேனையில் கடைகள் மூடப்பட்டன. வீதியால் சென்ற மக்கள் சிதறிஓடினர் நகர்வெறிச் சோடியது.

**மீனவரின்**

அண்டிய மகாபலிபுரம் கடற் கரையின் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது வலையில் பாரமான பொருளொன்று சிக்குவதை உணர்ந்தனர். தொடர்ந்து அந்த வலையை சென்னை ராயபுரம் மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில் இழுத்து வந்தபோது அதில் மேற்படி ரொக்கட்சிக்கியிருப்பதுகண்டுபிடிக்கப்பட்டது

இந்த ரொக்கட் மிகவும் பாரமாக இருந்ததால் இது பாரம்தூக்கியின் உதவியுடன் வெளியே எடுக்கப்பட்டது சென்னையிலுள்ள கடற்படை அதிகாரிகள் இதனை ஆராய்ந்து வருகின்றனர். இது தாக்குதல் ரொக்கட்டா அல்லது சிறிகரிகோட்டா விண்வெளி ஆய்வுகூட ரொக்கட்டா என்பது குறித்து ஆராயப்படுகிறது. சில தினங்களுக்கு முன்னர் விமானமொன்றின் பாகமும் மீனவர் வலையில் சிக்கியமை குறிப்பிடத்தக்கது.

**இராணுவம்**

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரக அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பயணிகளை சோதனையிட இராணுவத்தினர் இணங்கியுள்ளனர். இந்த யோசனைகளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் அரசாங்கத்தரப்பு தூதுக்குழுவினர் இன்றைய பேச்சுவார்த்தைகளின் போது தெரியப்படுத்துவர்.

இதற்கு விடுதலைப் புலிகளின் பதில் என்னவாக இருக்கும் என்பதைப் பொறுத்தே இப்பாதையைத் திறக்கும் சாத்தியப்பாடுகள் தங்கியிருக்கின்றன என ஹமில்டன் வணசிங்க விளக்கமளித்தார்.

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை திறப்பதற்கு இணங்குவதானால் பூநகரி

## வேக நடைப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் மாவட்ட திடகள விளையாட்டு விழாவையொட்டிய ஆண்கள், பெண்களுக்கான வேகநடைப் போட்டிகள் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன. இப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள சகல போட்டியாளர்களையும் அன்று காலை 7.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளை

**செய்தியாளர்**

உபாலி குரூப். விஜய குரூப், வீரகேசரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, அரசாங்க படப்பிடிப்பாளர், சண்டே லீடர்,

**நீரிழிவு**

உட்கார்ந்திருத்தல் போன்றவையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது, கவலையற்ற வாழ்க்கை, காய் கறி உணவை அதிகம் சேர்த்துக்

உலகநாடுகள்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலைபண்பாட்டுக் கழகமும் நீதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

இதனை ஆராய்ந்து வருகின்றனர். இது தாக்குதல் ரொக்கட்டா அல்லது சிறுகிரிகோட்டா விண்வெளி ஆய்வுகூட ரொக்கட்டா என்பது குறித்து ஆராயப் படுகிறது. சில தினங்களுக்கு முன்னர் விமானமொன் றின் பாகமும் மீனவர் வலையில் சிக்கியமை குறிப் பிடத்தக்கது.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலைபண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2. 30, 4. 00, 6. 00
சனி, ஞாயிறு காலை 10.30, 2.30, 4.30, 6.30

முக்கிய குறிப்பு:

பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக தொடர்பு கொண்டால் காட்சி நேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்

(சி-10572)


காரிகளின் கண்காணிப்பின் கீழ் பயணிகளை சோதனையிட இராணுவத்தினர் இணங்கியுள்ளனர். இந்த யோசனைகளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் அரசாங்கத் தரப்பு தூதுக்குழுவினர் இன்றைய பேச்சுவார்த்தைகளின் போது தெரியப்படுத்துவர்.

இதற்கு விடுதலைப் புலிகளின் பதில் என்னவாக இருக்கும் என்பதைப் பொறுத்தே இப்பாதையைத் திறக்கும் சாத்தியப்பாடுகள் தங்கியிருக்கின்றன என ஹமில்டன் வணசிங்க விளக்கமளித்தார்.

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை திறப்பதற்கு இணங்குவதானால் பூநகரி இராணுவமுகாம் அகற்றப்படல் வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள் அப்பாதையைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து பரிசீலிப்பதானால் பூநகரியிலிருந்து இராணுவ முகாமை அகற்றுவது குறித்தும் பரிசீலிக்க வேண்டும் என்று பி.பி.ஸிக்கு கடந்த வாரம் அளித்த பேட்டியில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க கருத்து தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் மாவட்ட தடகள விளையாட்டு விழாவையொட்டிய ஆண்கள், பெண்களுக்கான வேகநடைப் போட்டிகள் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 7. 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன. இப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள சகல போட்டியாளர்களையும் அன்று காலை 7.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது.

## சமாதான

தல் வெற்றி பற்றி எனக்கு முழு நம்பிக்கையுண்டு. மேல்மட்ட இராணுவ உயர்அதிகாரிகளின் எதிர்ப்பு இருந்த போதிலும் விடுதலைப் புலிகளுடன் தாம் நடத்தும் பேச்சுவார்த்தைகள் சிறந்த பலன்களை தரும் என்ற பூரண நம்பிக்கை தனக்கு உண்டு எனவும் பிரதமர் சந்திரிகா தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச டெலோ பொறுப்பாளரும் பிரதேசசபை அங்கத்தவருமான எஸ் விஸ்வானந்தன் (முகுந்தன்) கடந்த வியாழன் காலை வாழைச்சேனை நகரில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து இராணுவம் அப்பகுதியை

## செய்தியாளர்

உபாலி குரூப். விஜய குரூப், வீரகேசரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, அரசாங்க படப்பிடிப்பாளர், சண்டே லீடர், லக்விமரொயிட்டர், அசோஸியஸ்பிரஸ், லங்காபுவத், சந்தேசிய, இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் வந்தனர். (யோ)

## அரசாங்கக்

குழுவினர் நல்லூர் ஆலயத்திற்குச் செல்லத்திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை சந்தர்ப்பம் கிட்டும்பட்சத்தில் அரசாங்கக் குழுவினர் யாழ். ஆயரையும் சந்திக்கலாம் எனவும் அறியவருகின்றது.

சுற்றிவளைத்தபோது இளைஞர் ஒருவர் இராணுவத்தினருக்கு கைக்குண்டு வீசிவிட்டு சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என்றும் கைக்குண்டு வீச்சில் இரு படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது இச்சம்பவம் வாழைச்சேனை மக்கள் வங்கிக்கு முன்பாக காலையில் இடம்பெற்றது இச்சம்பவத்தினால் வாழைச்சேனையில் கடைகள் மூடப்பட்டன. வீதியால் சென்ற மக்கள் சிதறிஓடினர் நகர்வெறிச்சோடியது.

## உலகநாடுகள்

ஜப்பான், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, நோர்வே, டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகளே வடக்கு-கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கவும் முன்வந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பிரசார உதவி ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையற்றது என பலர் கருதுவதால் அவர் அப்பணியிலிருந்து ஒதுங்குவதைத் தவிர வேறு வழி இல்லை என இவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## நீரிழிவு

உட்கார்ந்திருத்தல் போன்றவையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது, கவலையற்ற வாழ்க்கை, காய் கறி உணவை அதிகம் சேர்த்துக் கொள்ளல் நீரிழிவு நோயின்றி வாழ உதவும் என உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

## காமினி

றது எனினும் எவருக்கும் காயமோ, சேதமோ ஏற்படவில்லை இது தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றன.


மக்களின் மகிழ்ச்சிக்கு சேரலின் சிறப்புச் செய்தி!!

★ எழினி புடவை வாணிபம் ★

வழங்கும் மலிவு விற்பனை

★ 25, 26, 27 ஆம் திகதிகளில் ★

சேரன் பணிமனை மண்டபம், கிட்டுசாலை - யாழ்ப்பாணம்.

(சி/10571)


## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு துரைரத்தினம் (சாண்டோ

பருத்திநகர் தந்த பெருந்திறன் சான்றோன் சாண்டோ மா. துரைரத்தினம் அவர்கள் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி நித்தியானந்தமங்களம் துரைரத்தினம் (பேபிஅக்கா) அவர்களின் அன்புக் கணவரும் முரளிதரன், கரிகரன், ரஜீகரன், வாகீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (24-10-94) காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் நல்லடக்கத்திற்காக பருத்தித்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை பருத்தித்துறை

தகவல்: குடும்பத்தினர்

(6177)


இப்பத்திரிகையாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.